1973 நவம்பர் 19]

Supply of water for tanks in Erode taluk.

* 167 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether detailed survey has been conducted for the construction of an anicut near Tiruppur across Noyyal river to divert a portion of water to Palathulvu tank and other tanks in Erode taluk; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) திருப்பூர் அருகே நொய்யல் ஆற்றின் குறுக்கேயுள்ள மன்னரை அணையை நான்கு அடிகள் உயர்த்தி பாசன வாய்க்கால் வெட்டி ஈரோடு தாலூகாவில் ஏற்கனவே உள்ள மூன்று ஏரிகளுக்கும் மேலும் புதிய ஆறு ஏரிகளுக்கும் பாசன வசதியளிப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தினுல் பயனடையும் பழைய ஏரிகளில் 'புஞ்சை பாலதொலவு' ஏரியும் ஒன்ருகும். இத்திட்டம் விரிவான ஆய்வில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, சமீபத்திலே சிறுபாசனத் திட்டங்கள் என்று சர்க்கார் அறிவித்த 10 திட்டங்களிலே இந்தத் திட்டம் சேர்க்கப்படவில்லையே, அதைச் சேர்ப்பதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I said that the Scheme is under detailed investigation. After the detailed investigation is over, it will be definitely included.

திரு. சு. துரைசாமி: போவைத் தலைவர் அவர்களே, நொய்யல் ஆற்றிலே அணை கட்டுவதன் மூலமாக பாசன வசதி கிடைக்கும் என்பதைவிட நல்லூர், முதலிபாளையம் ஆகிய இடங்களிலே உள்ள மக்கள் குடிநீர் இல்லாமல் கஷ்டப் படுகிருர்கள். அவர்களுடைய குடிநீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு முக்கிய மாகப் பயன்படும் என்கிற காரணத்தினுல் இந்தத் திட்டத்தை விரைவாகக் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவாகளே, இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். பரிசீலனை செய்யப்படும் பொழுது கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே பாமந்திப் பகுதியில் நொய்யல் ஆற்றில் ஒரு அணை கட்டும் திட்டம் ஏற்கனவே அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது இந்தக்

கேள்வியில் சொல்லப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்படும்பொழுது அங்கே கட்டப் படவிருக்கிற அந்தத் திட்டத்திற்குப் பாதகம் ஏதுவும் இருக்குமா? அப்படி பாதகம் எதுவும் இல்லாமல் அதைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

Surplus water from Kallanai Canal.

*168 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to utilise the surplus water of the Cauvery released from the Kallanai Canal in Thanjavur district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கல்லணைக் கால்வாயில் காவிரி ஆற்றின் உபரி நீர் செல்வதற்கு வழியில்லை. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, ஏராளமான தண்ணீர் வீணாகப் போவதன் காரணமாக நஷ்டம் ஏற்படுகிறதே அதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டதா? அதுபற்றி என்ன முடிவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கல்லணைக் கால்வாயில் நீர் வீணாகப் போவதில்லை. அதனுடைய கொள்ளளவிலே உள்ள தண்ணீரில் பாசனத்திற்குத் தேவையான தண்ணீர்தான் திறந்துவிடப்படுகிறது. தண்ணீர் வீணாகப் போகிறது என்ற கேள்வி எழவில்லை என்றுதான் சொன்னேன்.

பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனத் திட்டம்

*வினா 169—திரு. மு. பழனிசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டத்தினை மேலும் விரிவு படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கர்களுக்கு எந்த பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இதுபற்றிய செயற்குறிப்பு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் தலைமைப் பொறியாளரின் தொடக்க நிலை ஆய்வில் உள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.